[1971 டிசம்பர் 16

Death due to tetanus in Thanjavur Medical College Hospital

*455. *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a patient died in the Thanjavur Medical College Hospital due to tetanus, during November, 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம். 55 வயதுள்ள சுப்பிரமணியம் என்ற ஒரே ஒரு நபர் மட்டும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 25—11—70 அன்று இறந்தார்.

(இ) டாக்டர் எஸ். சுந்தரவெங்கிடகிருஷ்ணன் பிரிவைச சேர்ந்த சுப்பிரமணியம் 13—11—1970 அன்று சேர்க்கப்பட்டார். மூலச்சுட்டிக்காக, அவர் 'A' அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் 17—11—1970 அன்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டார். அவருக்கு 23—11—1970 அன்று இசிவு நோய் கண்டது. 'A' அறுவைச் சிகிச்சைக்கூடம் 23—11—1970 முதல் 31-12-1970 வரை ஏறத்தாழ 40 நாட்கள் மூடப்பட்டிருந்தது. நோயாளி 25-11-1970 அன்று இறக்க நேரிட்டது.

Dr. H. V. HANDE: Sir, now and then we hear about the reports that occasionally, casually in certain surgical theatres this tetanus enters the theatre and when it enters and after the patient dies the theatre is completely cleaned and disinfected and the tenanus is prevented. May I know whether it is possible for the Government to issue instructions, if necessary, to take preventive measurers likke tetanus toxide even before the operation starts and may I know whethre a general blanket order of that type will be issued under the guidance of the Hon. Minister for Public Health?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டெட்டனஸ் அல்லது இசிவு நோய் பொதுவாக நம்முடைய மருத்துவ மனைகளில் ஏற்படுவதில்லை. தஞ்சாவூரில் மருத்துவமனையில் இரண்டு நிகழ்ச்சிகள் ஏற்பட்டதன் காரணமாக அந்த ஆப்ரேஷன் தியேட்டர் 15, 20 நாட்களுக்கு மூடிவைக்கப்பட்டது. பிறகு கிருமி நாசினி மருந்து மூலமாக சுத்தப்படுத்தப்பட்டது. வாஷிங் சோடா மூலமாகவும் சுத்தப்படுத்தப்பட்டது. கார்போலிக் மிக்சர் மூலமாகவும் சுத்தப்படுத்தப்பட்டது. முதலிலே ஒரு இளைஞர் ஜான் என்பவருக்கு இசிவு நோய் கண்டது. அறுவைச் சிகிச்சை நடந்து 20 நாட்களுக்குப் பின்னர். அவருக்குச் சிகிச்சை தரப்பட்டு நலம் பெற்றுவிட்டார். ஆனால் இன்னொருவருக்கு இசிவு நோய் கண்டது. அவர் இறக்க நேரிட்டது. இதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டது.

Reader in Operative Surgery Dr. Sundaravenkatakrishnan, Honorary Surgeon, Dr. Sivaraman, Chief Anaesthesis, Dr. (Thyagesan)

ஆகியவர்கள் எல்லாம் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

1971 டிசம்பர் 16]

Dr. Sundaraventakrishnan had reported that the patient had a thorn prick in the foot three days prior to admission in the hospital, namely, on 12th August 1970.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இசிவு நோய் கண்டது சிகிச்சையிலே ஏற்பட்ட குறைபாடா என்பது கண்டுபிடிக்க முடியவில்லை, அல்லது ஆப்பரேஷன் தியேட்டரிலே ஏற்பட்ட குறைபாடா என்று சொல்லமுடியவில்லை. குறிப்பிட்ட நோயாளியைப் பொறுத்தவரையில் வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். இனிமேல் அப்படி ஏற்படாமல் பிரிகாஷனரி மெஷர்ஸ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Local Fund Dispensary at Denkanikota

* 456. *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the local fund hospital at Denkanikota; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தேன்கனிக் கோட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை அரசு ஏற்று நடத்த என் 2176 சுகாதாரம் 19—8—1971-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether the orders for upgrading the Denkanikottah hospital is sent to the authorities there and action taken?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையின்படி நடவடிக்கைகளும் எடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

சேத்தூர் நகர பஞ்சாயத்துக்கு அரசு மருத்துவமனை

*457 **வினா—திரு. க. சுப்பு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் உள் வட்டம், சேத்தூர் நகரப் பஞ்சாயத்தில் நிறைந்த வசதிகளோடு கூடிய அரசாங்க மருத்துவ மனை ஒன்றை அமைக்கக் கோரி இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக்குழு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு .க. அன்பழகன் : தீர்மானம் வரவில்லை.